தனி பிரதி ரூ. 5/–
ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 7 இதழ் : 11 செப்டம்பர் – 2011




**உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்**
**தேவன்**
**பிரியமாயிருக்கிறார்.**

2 கொரி. 9:7

ஆசிரியர்
சகோ. வே. தேவதாஸ்

# ✍ உங்கள் சகோதரனிடமிருந்து....



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை ஷாலோம் பணித்தளத்திலிருந்து கூறுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். தேவன் தாமே இந்த செப்டம்பர் மாதத்தினை காணும்படியாக செய்த கிருபைக்காக அவரைத் துதிப்போம்.

“அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,” “உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி,” “ நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயதுபோலாகிறது.” என்ற இந்த வசனங்களின்படி கடந்த மாதம் முழுவதும் தேவன் நம்மை நடத்தினபடியால் தேவனைத் துதிப்போம்.

தேவனுடைய பெரிதான கிருபையினால், பல ஆண்டுகளுக்குப் பிறகு, எங்களது பிள்ளைகள் டைட்டஸ், ஷாலோம் & ஷெக்கினா மூவரும் இணைந்து பணித்தளத்திற்கு வந்தார்கள். மூவரும் இணைந்து பணித்தளத்தில் அனைத்து ஊழியர்கள் கூடுகைகளிலும் கலந்து கொண்டும், ஷாலோம் பள்ளி மற்றும் அனைத்து ஷாலோம் விடுதிகளையும் சந்தித்தும், பாடல்கள் பாடியும் சாட்சிகளையும், வசனங்களையும் கூறியும் தேவனை மகிமைப்படுத்தினார்கள். மட்டுமல்லாமல் அனைத்து சுதேச ஊழியர்களின் பிள்ளைகளுக்கான சிறப்பு கூடுகைகளிலும் பங்கு பெற்று தேவனை மகிமைப்படுத்தினார்கள். மேலும் ஷெக்கினா 27.08.2011 அன்று இரண்டாம் ஆண்டு மருத்துவப் படிப்பிற்காக ரஷ்யாவிற்கு கடந்து சென்றாள். அவளுக்காகவும், டைட்டஸ் மற்றும் ஷாலோம் இவர்களின் எதிர்கால ஊழியங்களுக்காவும் ஜெபியுங்கள்.

கடந்த மாதம் குஜராத் & மத்தியப்பிரதேசம் மாநிலங்களில் உள்ள 300க்கும் அதிகமான சபைகளில் ஞாயிறு பள்ளி பயிற்சிகள் வெகு சிறப்பாக நடத்தப்பட்டன. எனது மனைவி சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் இந்தப் பயிற்சிகளை மிகவும் நேர்த்தியாக நடத்தினார்கள். சிறுவர் மத்தியில் ஊழியங்கள் வளர ஜெபியுங்கள்.

இந்த செப்டம்பர் மாதத்தில் 3 மாநிலங்களிலும் உள்ள அனைத்து சபை ஊழியர்களுடன் மூப்பர்களையும் சந்திக்க ஜெபித்துத் தீர்மானித்துள்ளேன். அக்டோபர் மாதம் நடைபெறவுள்ள ஷாலோம் மிஷன் ஞாயிறுக்காகவும், 10 லட்சம் ஆத்தும அறுவடை திட்டத்திற்காகவும் Shalom Diocese Church Network –க்கும் உங்களது ஜெபங்கள் அதிகமாக தேவைப்படுகிறது. பீல் மக்களின் இரட்சிப்பின் பணியை ஜெபித்துத் தாங்கிவரும் உங்கள் யாவரையும் தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக!

**இஸ்ரவேலே, நீ பாக்கியவான்; கர்த்தரால் ரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்? உனக்குச் சகாயஞ்செய்யும் கேடகமும் உனக்கு மகிமைபொருந்திய பட்டயமும் அவரே;**

உபா. 33:29

*தேவ அறுவடைப்பணியில் உங்கள் அன்பு சகோதரன்*

(Rt. Rev. Dr. V. Devadass)

மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468

# தேவனுக்கென்று காணிக்கை...

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

***ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.***

கர்த்தருக்காக, கர்த்தருடைய ஊழியங்களுக்காக, கர்த்தருடைய சபைக்காக, கர்த்தருடைய ஊழியர்களுக்காக நாம் கொடுப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். கொடுப்பதை குறித்து வேதம் மிக அழகாக போதிக்கிறது. பிதாவாகிய தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவனுக்காக, சபைக்காக எப்படி கொடுக்கவேண்டும் என்பதையும் நற்காரியங்களுக்காக எப்படி உதவவேண்டும் என்பதை தெளிவாக கூறுகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் கொடுப்பதை குறித்து கற்றுக்கொடுக்கிறார். பரிசுத்த பவுல் சபைகளில் விசுவாசிகள் எப்படியாக கொடுக்க வேண்டும் என்பதை கற்றுக்கொடுக்கிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எருசலேம் ஆலயத்தில் பிரவேசித்த போது ஆலயத்தில் காணிக்கை போட்டவர்களைக் கண்டு மிக அழகான சத்தியத்தை விளக்குகிறார். அதனை லூக்கா 21:1 to 4 வரை வாசிக்கும் போது அறியலாம். **"அவர் கண்ணேறிட்டுப் பார்த்த போது, ஐசுவரியவான்கள் காணிக்கைப் பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார். ஒரு ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துத் தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள் ; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்".** இப்பகுதியிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? என்பதை தியானிப்போம்.

## தேவனுக்காக காணிக்கை செலுத்தும் போது தேவன் அதை காண்கிறார்

முதலாவது தேவனுக்காக நாம் காணிக்கைகள் கொடுக்கும் போது தேவன் காண்கிறார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். எருசலேம் தேவாலயத்தில் பல ஐசுவரியவான்கள் காணிக்கை போடுவதை இயேசு கண்ணேறிட்டுப் பார்த்தார். ஏழைகள், கஷ்டப்படுகிறவர்கள்

போடுவதையும் பார்த்தார். நாம் காணிக்கை போடுவதை தேவன் காண்கிறார் என்பதை அறியும் போது தேவனுக்கு கொடுப்பதில் ஆனந்தமடைவோம். அநேக வேளையில் மனிதர்கள் காணும்படியாக காணிக்கை (அதிகம் கொடுக்க திராணியிருந்தும்) மனிதர்கள் காணக்கூடாதபடி போடுகிறதை காண்கிறோம். நாம் எப்படிபட்ட சூழ்நிலையில் கொடுக்கிறோம் என்பதை மற்றவர்கள் அறிய மாட்டார்கள். ஒருவேளை அதைக்குறித்து பாராட்டுதலை தெரிவிக்க மாட்டார்கள் ஆனால் தேவனுக்காக கொடுப்பதை தேவன் கண்ணோக்கி பார்க்கிறார் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

## தேவனுக்காக முழுமையாக கொடுத்த விதவை

தேவனுக்காக நாம் கொடுக்கும் போது அதை தேவனிடத்தில் கொடுக்கிறோம் என்பதை மறக்கக்கூடாது. அநேக தேவ ஜனங்கள் தாங்கள் கொடுக்கும் காணிக்கைகளை பிரசித்தப்படுத்த விரும்புவார்கள். இயேசு கிறிஸ்து அந்த ஏழை விதவையை கண்டபோது விதவையின் பெயரை கேட்கவோ, சொல்லவோ, எழுதவோ இல்லை. இயேசு கிறிஸ்து பின் வருமாறு கூறினார். (மத்தேயு 6: 2 to 4) **“ஆகையால் நீ தர்மஞ்செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்”.**

தேவனுடைய தீர்க்கதரிசி எலியாவை போஷித்த சாறிபாத் விதவை, எலிசாவை உபசரித்த சூனேமித்தியாள்; 5000 புருஷர்களுக்கு அதிகமான பேர்களை இயேசு போஷிப்பதற்கு 5 அப்பங்கள் 2 மீன்கள் கொடுத்த சிறிய பையன், இயேசுவுக்காக பிரயாணம் செய்ய கழுதைகளை கொடுத்த எஜமான்; மேலறையை இராப்பந்திக்கு தந்த வீட்டுக்கு உரிமையாளன் என்று அநேகரை காணலாம்.

ஆண்டவராகிய இயேசு கூறினார், இந்த சிறியரில் ஒருவரான இவர்களுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று கூறினார். ஆகையால் தேவனுக்காக, ஊழியங்களுக்காக கொடுக்கும் போது, ‘‘இயேசுவுக்காக’’ கொடுக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. நம்முடைய பெயர் வெளி வரவில்லையே, என பெயர் பிரஸ்தாபத்திற்காக நாம் கொடுக்க கூடாது.

### தேவனுடைய கட்டளைகளுக்கு கற்பனைகளுக்கு கீழ்படிவதால் கொடுக்கிறோம்:

இந்த ஏழை விதவை தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்படிந்த ஒரு பெண்ணாகும். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அவர் சமூகத்தில் வரும்போது வெறும் கையனாக வரக்கூடாது என்ற கற்பனையை அறிந்தும், அதன்படி நடக்கிற ஒரு ஏழை விதவையாக இருந்தால். வேதத்தில் நாம் தேவனுக்கு கொடுக்க வேண்டிய பல காரியங்களை தேவன் தந்துள்ளார்.

- தசமபாக காணிக்கைகள்
- விளைவின் முதற்பலன்
- உற்சாகமான காணிக்கைகள்
- பலிகள்
- அறுப்பின் பண்டிகை காணிக்கைகள், துதிபலிக் காணிக்கைகள், ஆலயப் பணிக்கான காணிக்கைகள்
- திருச்சபைக்கான காணிக்கைகள், மிஷனெரி காணிக்கைகள் என்ற பல காணிக்கைகளை வேதம் நமக்கு போதிக்கிறது. அதற்காக நாம் கீழ்படிய வேண்டும். அர்ப்பணிக்க வேண்டும்.

தசமபாகத்தை தேவன் கொடுக்க வேண்டும் என்று கட்டளை கொடுத்துள்ளார். நம்முடைய எல்லாமும் தேவனுடையது. ஆனால் தேவ கட்டளையின்படி நாம் தசமபாகத்தை படைக்கும் போது 90% நாம் அனுபவித்தாலும் தசமபாகத்தை அர்ப்பணிக்கும்போது, நாம் நம்முடைய உடமைகளுக்கு, சம்பாத்தியத்திற்கு நாம் சொந்தம் கொண்டிருந்தாலும், அதற்கு தேவனே ஆளுகை செய்கிறவர் என அறிக்கைச் செய்கிறோம். ஆனால், புதிய ஏற்பாட்டில் தசமபாகம் என்பதல்ல. நம்மையும் நமக்குறிய எல்லாவற்றையும் இயேசுவுக்கே என்று அர்பணிக்க தேவன் விரும்புகிறார். நம்மையும், நமக்குறிய அனைத்தையும் தேவனுக்காக ஒப்புக் கொடுக்கும் போது தேவன் நம்மை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்கிறார்.

### தேவனிடத்தில் அன்பு கூறுபவர்கள் தேவனுக்கென்று முழுமையாக கொடுப்பார்கள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த ஏழை விதவையின் கொடுத்தலைக் குறித்து பேசும் போது இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்த எல்லாவற்றையும்

போட்டுவிட்டாள். இது எப்படிக் கூடும்? தேவன் பேரில் கொண்டுள்ள அன்புதான். லூக்கா 8ம் அதிகாரத்தில் பாவியான ஸ்திரி இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் விழுந்து, கண்ணீரால் பாதத்தை நனைத்து தலைமயிரால் துடைத்து முத்தமிட்டு தன் வாழ்வில் விலையேறப் பெற்றதாய் வைத்திருந்த பரிமள தைலத்தை ஊற்றினாள் என்று காண்கிறோம். சீமோன் அதைக் குறித்து சிந்தித்த போது இயேசு அவனைப் பார்த்து "எவனுடைய பாவங்கள் அதிகமாய் மன்னிக்கப்பட்டதோ அவன் அதிகமாய் அன்பு கூறுவான்" என்று பதிலளிக்கிறார். தேவனிடத்தில் முழுமையாக அன்பு கூறுபவர்கள் அவருக்காக தங்களையே கொடுப்பார்கள். சீமோன் பேதுரு **"உம்மை நேசிக்கிறேன் என்று அர்ப்பணித்த போது தன் வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்து அவருக்காக ஊழியம் செய்து தன் ஜீவனையே கொடுத்தார்".** மூன்று நாட்கள் இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்ட சிறுவன் உங்களிடத்தில் என்ன இருக்கிறது என்று கேட்ட தேவனுக்காகவும் தேவன் திரளான ஜனங்களை ஆசீர்வதிப்பதற்காகவும் தன்னிடத்திலிருந்த முழுமையான ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொடுத்தான். ஏனென்றால் இயேசுவின் மேல் வைத்த அன்பல்லவா? தேவன் மேல் வைத்த அன்பு, அந்த ஏழை விதவைக்கு தன் வறுமையைக் காட்டிலும் மிகப் பெரியதாக இருந்தது. நாமும் தேவனுக்காகக் கொடுக்கும் போது, அவரிடத்தில் அன்பு கூறுகிறவர்களாய் தேவன் மீதுள்ள அன்பின் நிமித்தமாய் கொடுப்போம். கல்வாரி சிலுவையை நோக்கிப் பார்ப்போம். பிதாவாகிய தேவனின் அன்பின் நிமித்தமாக அவர் தம்முடைய ஒரே குமாரனை இந்த உலகிற்கு அனுப்பினார். இயேசு கிறிஸ்து நம் மீது வைத்த அன்பின் நிமித்தமாக தன் ஜீவனையே ஈந்தார். நாமும் இயேசுகிறிஸ்துவை நேசிப்போம் என்றால் முழு உள்ளத்துடன் அவருக்காக, அவருடைய சுவிஷேச பணிக்காக கொடுப்போம்.

**"அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே".** 2 கொரி. 8:9

**"அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரயமாயிருக்கிறார்.".** 2 கொரி. 9:7

தேவனிடத்தில் அன்புகூர்ந்து தேனுக்காக கொடுக்கும் உங்கள் அனைவரையும் தேவன் பல மடங்காக ஆசீர்வதிப்பாராக!

## *ஷாலோம் ஜெபக் கூடுகைகள்*

தேவனுடைய பெரிதான கிருபையாலும் இரக்கத்தாலும் நமது ஷாலோம் ஜெபக் கூடுகைகள் நமது ஷாலோம் ஆதரவாளர்களின் இல்லங்களில் நடைபெற்று வருகிறது. இறுதி நாட்களில் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட ஜெபம் மிகவும் அவசியம், எனவே தேவனுடைய திட்டத்தின்படி இந்த நாட்களில் ஜெபக்கூடுகைகள் **ஒவ்வொரு மாதம்** நடைபெற்று வருகின்றன. இந்தக் கூடுகைகளில் தேசத்திற்காய், ஊழியங்களுக்காய், ஊழியர்களுக்காய், குடும்பங்களுக்காய், ஜெபித்து வருகிறோம். தற்பொழுது நடைபெற்றுவரும் ஜெபக் கூடுகைகளின் விபரங்களை கீழே கொடுத்துள்ளோம்.

மேலும் உங்கள் இல்லங்களிலும், உங்கள் பகுதிகளிலும் ஜெபக்கூடுகைகள் நடத்த நீங்கள் விரும்பினால் நமது ஷாலோம் ஊழியர் **சகோ. ரதீஸ்குமார்** அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு ஆலோசனைகளையும், ஜெபக்குறிப்புகளையும் வழங்குகிறோம். தொடர்பு கொள்ள வேண்டிய ***செல் : 9600695598***

### *செப்டம்பர் மாதம் ஜெபக்கூடுகைகள் நடைபெறும் விபரங்கள்*

| தேதி | நாள் | நேரம் | இடம் / தொடர்பு |
|---|---|---|---|
| 02.09.2011 | முதல் வெள்ளி | மாலை 7 மணி | **சகோ. பாஸ்கர்,** 23-A. பிள்ளையார்கோவில் தெரு, ஸ்டேட் பேங்க் காலனி, தூத்துக்குடி – 2. செல் : 99940–25696 |
| 03.09.2011 | முதல் சனி | காலை 9.30 மணி | **Sharing Love Mission** தலைமை அலுவலகம், 5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9345675468 |
| 17.09.2011 | மூன்றாம் சனி | மாலை 6 மணி | **சகோ. ஜெயக்குமார்,** 2/328, 5 வது தெரு (Extn.) P&T காலனி, தூத்துக்குடி – 8. செல் : 9843379994 |
| 28.09.2011 | கடைசி புதன் | மாலை 7 மணி | **சகோ. சாமுவேல் ஜெயராஜ்,** 48, அண்ணாநகர் 10வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9789569737 |

**சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்.....** ஏசாயா 60:22

### குஜராத்

கோர்தன்பாய் என்ற சகோதரர் நெஞ்சுவலியினால் கஷ்டப்பட்டார். ஆப்ரேஷன் செய்யவேண்டும் என்று மருத்துவர் கூறினார். விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**– சகோ. வீர்சிங் பாரியா, தார்மி,**

காந்தாபேன் என்ற சகோதரி வாந்தி ஏற்பட்டு கஷ்டப்பட்டார். ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார். 2. சோம்லாபேன் என்ற சகோதரி தலைவலியினால் கஷ்டப்பட்டார். விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் சுகத்தை தந்தார். **– சகோ. பாட்சு பாரியா ராச்சரடா**

நிலேஷ்பாய் என்ற சகோதரரின் குழந்தை 1 மாதமாக வியாதிப்பட்டது. மருந்துகள் சாப்பிட்டும் எந்த பலனுமில்லை. ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**– சகோ. சாகன் L. கமால், வாங்கட்**

ஜெயஷ்பாய் என்ற சகோதரர் 6 மாதமாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டார். மருந்துகள் சாப்பிட்டும், மந்திரம் செய்தும் எந்த பலனுமில்லை. ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார். **– சகோ. சாகன் பார்கி, மத்வா**

நபுடிபேன் என்ற சகோதரியின் குழந்தை மஞ்சள் காமாலை மற்றும் காய்ச்சலினால் அதிக கஷ்டப்பட்டது. மருத்துவமனையில் அனுமதித்தும் எந்த பலனுமில்லை. ஊழியர் குடும்பமாக ஜெபித்தபோது தேவன் சுகத்தை தந்தார். **– சகோ. வில்சன் சங்காடா நகரேலா**

### இராஜஸ்தான்

சாசிபேன் என்ற சகோதரி தலைவலி மற்றும் மயக்கம் ஏற்பட்டு கஷ்டப்பட்டார். ஜெபத்தில் விடுதலை கிடைத்தது. 2. சர்மிளாபேன் என்ற சகோதரி வயிற்றுவலியினால் கஷ்டப்பட்டார். விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் சுகத்தை தந்தார்.

**– சகோ. ரூப்லால் M. பார்கி, பத்தியா கோடார்**

மான்ஜிபாய் என்ற சகோதரர் 4 வருடமாக வியாதியினால் பாதிக்கப்பட்டார். மருந்துகள் சாப்பிட்டும் எந்த பலனுமில்லை. ஜெபித்தபோது தேவன் சுகத்தை தந்தார்.

**– சகோ. தாவ்ரா மேடா, காக்கன்வானி**

வாஜ்ஸிங் என்ற சகோதரரின் மனைவியை தேள் கடித்துவிட்டது. விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் சுகத்தை தந்தார். **– சகோ. வஜ்ஹிங் மேடா, சத்ரகார்**

ஷேரன் என்ற குழந்தை மலேரியா காய்ச்சலினால் கஷ்டப்பட்டது. ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார். **– சகோ. வால்சிங் H. நினாமா, சாக்வா**

சபுபேன் என்ற சகோதரரின் மகன் கழுத்தில் கட்டி ஏற்பட்டு கஷ்டப்பட்டான். எண்ணெய்பூசி ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார் **– சகோ. தனா சர்போடா, சாக்வா**

**மத்தியப்பிரதேசம்**

லால்சிங்பாய் என்ற சகோதரர் ஆஸ்துமா வியாதியினால் கஷ்டப்பட்டார். விசுவாசித்து இயேசுவை ஏற்றுக்கொண்டு ஜெபித்தபோது தேவன் சுகத்தை தந்தார் **– சகோ. அபிஷேக் M. நினாமா, பிப்ளிபாடா**

பூரிபேன் என்ற சகோதரி பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டார். விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார் **– சகோ. தேவ்சிங் கோரி தாந்தல்புரா, மத்தியப்பிரதேசம்**

பானுபேன் என்ற சகோதரியை விஷப்பூச்சி கடித்துவிட்டது. ஆலயத்திற்கு வந்து விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார் **– சகோ. ஹரிசந்திர மேடா, பான்டா**

ரீனா என்ற 1 வயது குழந்தை நிமோனியா காய்ச்சலினால் கஷ்டப்பட்டாது. விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் சுகத்தை தந்தார் **– சகோ. ஜோயல் பாரியா, வேத்புரி**

ஆராதனாபேன் என்ற 3 வயது மகள் மஞ்சள்காமாலை வியாதியினால் கஷ்டப்பட்டாள். விசுவாசித்து ஜெப எண்ணெய்பூசி ஜெபித்தபோது தேவன் சுகத்தை தந்தார் **– சகோ. கானுசிங் B. புரியா , பிப்ளிபாடா**

ஜாமுபேன் என்ற சகோதரியின் மகன் சரீரத்தில் புண்கள் ஏற்பட்டு கஷ்டப்பட்டான். ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார் **– சகோ. நார்சிங் பபேரியா, வாவடி**

டிட்டியாபாய் என்ற சகோதரர் 8 வருடமாக வியாதியினால் கஷ்டப்பட்டார். மருந்துகள் சாப்பிட்டும் எந்த பலனுமில்லை. ஆலயத்திற்கு வந்து விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார் **– சகோ. புர்சன் புரியா, அந்தர்வேலியா**

# ஜெபிக்க வேண்டுகிறோம்...



- குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் வசிக்கும் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி ஜனங்கள் அனைவரும், நமது தலைமுறையில் இரட்சிக்கப்பட்டு தேவனண்டையில் திரும்ப ஜெபியுங்கள்.
- **Rt. Rev. Dr. V. Devadass, Sis. Vahitha Devadass** மற்றும் பிள்ளைகள் **Gladson Titus** **(MBA II Year)** **Brighton Shalom** **(B.Tech Media Final Year)** **Joy Shekinah** **(Doing M.B.B.S.,)** இவர்களுக்காக ஜெபியுங்கள்.
- தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியங்களையும், ஊழியர்களையும் தேவன் ஆசீர்வதிக்கவும், குஜராத் பணித்தள அலுவலக ஊழியங்களையும், ஊழியர்களையும் தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.
- பணித்தளங்களில் தேவன் நல்ல மழையைத் தந்து வருகிறமைகாக அவருக்கு நன்றி சொல்லியும், மழை நமது விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமாக அமையவும், விவசாயத்தில் தேவன் நல்ல அறுவடையை தந்து ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.
- நமது பணித்தளத்திலுள்ள கிராமங்களில் CBN ஸ்தாபனத்துடன் இணைந்து போடப்பட்டு வரும் ஆழ்குழாய் கிணறுகளுக்காக ஜெபியுங்கள். இந்த திட்டத்திற்கு எதிர்ப்போ தடையோ வராமல் தேவன் பாதுகாக்கவும், அனைத்து இடங்களிலும் தண்ணீர் நல்ல தண்ணீராகவும் செழிப்பாகவும் இருக்க ஜெபியுங்கள்.
- நமது ஷாலோம் ஊழியங்கள் மூலமாக நடைபெறும், வீட்டுக் கூடுகைகள், உபவாச கூடுகைகள், தடைகள் இல்லாமல் நடைபெறவும், அநேகர் பங்கு பெறவும், தேவன் ஆசீர்வாதத்தை அளவில்லாமல் ஊற்றவும் ஜெபியுங்கள்.
- ஷாலோம் ஆதரவாளர்களின் குடும்பத்திற்காக ஜெபியுங்கள். ஊழியத்திற்கு கொக்கும்போது தேவன் அவர்களை ஆசீர்வதிக்கவும், அவர்கள் தேவைகளை தேவன் சந்திக்கவும், சுகவீனப்பட்டுள்ளோர் சுகமடையவும், திருமணத்திற்காக காத்திருப்போருக்கு தேவன் நல்ல துணையை காண்பிக்கவும், வேலை வாய்ப்பு இல்லாதோருக்கு வேலை வாய்ப்பினை தேவன் ஏற்படுத்தித் தரவும், தொழில் செய்வோர் தொழிலை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.
- வருகின்ற அக்டோபர் மாதம் நமது பணித்தளதங்களில் **"ஷாலோம் மிஷன் ஞாயிறு"** (Shalom Mission Sunday) நடைபெறவுள்ளது. தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த ஆண்டு நமது ஷாலோம் ஊழியங்களின் 20 ஆண்டுகள் நிறைவு ஸ்தோத்திர மிஷன் ஞாயிறாக கொண்டாடப்படுகிறது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு விசுவாசிகள் உற்சாகமாய் ஊழியங்களுக்கென்று காணிக்கைகளைப் படைக்கவும், இதற்காக ஏறெடுக்கப்படும் அனைத்து ஆயத்தங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் மறவாமல் தொடர்ந்த ஜெபியுங்கள்.

## ஊழியர்கள் தேவை...

**"அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்." மத்தேயு 9:37**

பீல் மக்கள் மத்தியில் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டும் பணியில், எங்களுடன் இணைந்து ஊழியங்களை நிறைவேற்ற குஜராத், தாகோத்திலுள்ள ஷாலோம் பணித்தள அலுவலகத்தில் ஊழியம் செய்ய தேவ பிள்ளைகள் மிகவும் அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுகிறார்கள்.

1. **நிதித் துறையை நிர்வகிக்க... B.com., முடித்து அனுபவமுள்ளோர் (Accounts Department)**
2. **தமிழ் & ஆங்கிலம் Typing தெரிந்தோர்... (Report Department)**
3. **Media & Communication Director ஆக செயல்பட...**
4. **நமது பேராயர் Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்களுக்கு Personal Assistant ஆக செயல்பட...**
5. **சமையல் பணி செய்ய...**

இதற்காக பாரத்துடன் ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் ஊழியத்திற்கென்று அர்ப்பணித்த, தேவனால் அழைக்கப்பட்ட, ஊழிய வாஞ்சை உள்ளவர்கள் இதை ஒரு தேவனுடைய அழைப்பாகவும், அரிய வாய்ப்பாகவும் கருதி எங்களோடு தொடர்பு கொள்ள அன்பாய் கேட்கிறோம்.

**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்." யோவான் 12:26**

## எங்களுடன் தொடர்பு கொள்ள


| | | |
|---|---|---|
| | Cell : | 09377445468 - Bro. V. Devadass,<br>09345675468 - Bro. Sam Gunaseelan |

<u>தலைமை அலுவலகம்</u> : **Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. Tamil Nadu. Phone: 0461 - 2375468

..... கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்....
வெளி. 14:13

# வெண்ணங்கி தரித்தோர் வரிசையில்.....



பெயர்

## திருமதி. ஃபிபி சம்யுக்தா

பிறப்பு : 26.02.1947, இறப்பு : 01.08.2011
வயது : 64

கோயம்புத்தூர், அப்போஸ்தல ஜெபவீடு சபை போதகர் Pr. ஜோயல் அனந்தராஜ் அவர்களின் அன்பு மனைவி சகோதரி **ஃபிபி சம்யுக்தா அனந்தராஜ்** அவர்கள் **01.08.2011** அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்.

சகோதரி ஃபிபி சம்யுக்தா அவர்கள் நமது பிஷப் வே. தேவதாஸ் அவர்கள் இரட்சிக்கப்பட்ட நாளிலிருந்து, அவர்களுக்கு ஒரு ஆவிக்குரிய தாயாக இருந்தவர். மேலும் நமது ஷாலோம் ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரை ஷாலோம் ஊழியங்களின் பிரதிநிதியாக செயல்பட்டு, காணிக்கைகளை சேகரித்து அனுப்பியும், ஜெபத்தால் தாங்கியும் வந்தார்கள். மேலும் கோயம்புத்தூர் பகுதியில் அப்போஸ்தல ஜெப வீட்டின் மூலமாக அநேகருக்கு ஆசீர்வாதமாகவும், கர்த்தருக்கு சாட்சியாகவும் வாழ்ந்து வந்தார்கள்.

இவரை பிரிந்து வாடும் அன்பு கணவர் Pr. ஜோயல் அனந்தராஜ் அவர்களுக்காகவும், மகள் மாலினி, மகன் கமலேசன் ஆகியோருக்காவும் ஜெபியுங்கள்.

## ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்களை பயன்படுத்துங்கள்....

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! நமது ஷாலோம் ஊழிய தலைமை அலுவலக ஊழியர்களை, அநேக வீடுகளில் நடைபெறும் ஜெபக் கூடுகைகள், ஞாயிறு ஆலய ஆராதனைகள், முழு இரவு ஜெபங்கள், கன்வென்சன் கூட்டங்கள், உபவாச ஜெபங்கள், சுகமளிக்கும் ஆராதனைகள் ஆகியவற்றில் பாடல்கள் பாடவும், ஆராதனை நடத்தவும் மற்றும் செய்தியளிக்கவும் தேவன் பயன்படுத்தி வருகிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

மேலும் ஷாலோம் ஆதரவாளர்களாகிய உங்கள் இல்லங்களில் ஜெபக் கூடுகைகள் நடத்தவும், உங்கள் ஊழியத்தின் சார்பிலும் ஆலயத்தின் சார்பிலும் கன்வென்சன் கூட்டங்கள் நடத்தவும் மற்றும் உபவாச கூட்டங்கள், முழு இரவு ஜெபங்கள், சுகமளிக்கும் ஆராதனைகள் ஆகியவற்றை நடத்த ஆயத்தமாக உள்ளனர். மேலும் சிறுவர் முகாம்கள் நடத்தவும் சகோதர சகோதரிகள் ஆயத்தமாக உள்ளனர். நீங்களும் நமது ஷாலோம் ஊழியர்களை பயன்படுத்த விரும்பினால் நமது ஷாலோம் ஊழியர் சகோ. ரத்திஸ் குமார் அவர்களை தொடர்பு கொள்ளுங்கள். செல் : 9600695598

## இணையதளத்தில் நமது
## அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர்



*பிரியமானவர்களே,*

நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இந்த **"அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்"** இதழை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**web address : http://www.shalommission.in**

## தேவனைத் துதிக்கிறோம்...

கடந்த 31.07.2011 ஞாயிறு அன்று புதியம்புத்தூர் CSI பரிசுத்த யோவான் ஸ்நானகன் ஆலயத்தில் நமது ஷாலோம் ஊழியர்கள் கடந்து சென்று, ஞாயிறு ஆராதனையை துதி ஆராதனையாக நடத்தவும், நமது ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொள்ளவும் தேவன் கிருபை செய்தார். ஆராதனையை சகோ. ஆலன் எல்விஸ் மற்றும் சகோ. ரத்திஸ் குமார் ஆகியோர் நடத்தினார்கள். சகோ. சாம் குணசீலன் அவர்கள் நமது ஊழிய பணித்தளத்தைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். அதன்பின் சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ் அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது. மேலும் இந்த வாய்ப்பினை வழங்கிய சபை குரு Rev. தேவராஜன் ஐயர் அவர்களுக்கும், சபை அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் நன்றி தெரிவித்து, தேவனைத் துதிக்கிறோம்...

## SHALOM LIFE MEMBERSHIP ENROLLMENT

## `ôúXôm F¯V BÙs LôX AeLj§]WôL AûZl×

***கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,*** ஆவியானவரின் வழிநடத்துதலின்படி ரூ. 1000/– ஒரு முறை செலுத்தி ஷாலோம் ஊழியத்தின் ஆயுள் கால அங்கத்தினராக இணையும்படி அன்புடன் அழைக்கிறோம். இந்தத் திட்டத்தில் இணைந்தவுடன் உங்களுக்கு சிறப்புச் சான்றிதழ், மாதம்தோறும் பத்திரிகை, மற்றும் வருடம் ஒருமுறை ஊழிய வளர்ச்சிக் குறித்த சிறப்பு அறிக்கை அனுப்பப்படும். உங்களுக்காக நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மேலும் இந்தத் திட்டத்தின் மூலம் வரும் நிதியினால் மாதாந்திர செலவினங்கள் ஏற்ற காலங்களில் செய்யப்படவும், நிதி நெருக்கடி நேரங்களை சமாளிக்கவும், ஒரு சிறப்பு வைப்பு நிதியாக வைக்கத் தீர்மானித்துள்ளோம்.

இவ்வருட இறுதிக்குள்ளாக, குறைந்தது 1000 அங்கத்தினர்கள் இணைக்கப்பட ஜெபித்து வருகிறோம். முதலாவது நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் அங்கத்தினராக இணையுங்கள், மேலும் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு இத்திட்டத்தை அறிமுகப்படுத்துங்கள். உங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களில் குறைந்தது 5–லிருந்து 10 பேருக்காவது இத்திட்டத்தை அறிமுகப்படுத்த சிறப்பு ரசீதுகளும், ஊழிய அறிமுக அறிக்கைகளும் அனுப்புகிறோம். நீங்கள் இந்தத் திட்டத்திற்காக உதவி செய்து, பீல் மக்கள் மத்தியில் தேவனுடைய ராஜ்ஜியம் விரைவாக கட்டப்பட உதவுங்கள். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

## *உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்...*

*அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தால், மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் அவற்றை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம்.

இது நாங்கள் உங்களுடன் சரியாக தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும். மேலும் உங்களது தொலைபேசி மற்றும் மொபைல் எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

# `ôúXôm ª`ù]¬ ù_TdáÓûL

| நாள் | நேரம் |
|---|---|
| **10.09.2011, சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை** |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
**M.T.N.** பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*தேவ செய்தி :* **Pr. K. சுந்தர்,** உடன் ஊழியர் A.G. சபை, ஆற்றூர்

***யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.***

தொடர்புக்கு

**சகோ. செல்வதுரை,** **Cell : 94876-89869,**

**சகோ. ஜார்ஜ்,** **Cell : 98944-78405** **சகோ. கிங்பெர்ட்,** **Cell : 94868-64820**

## குஜராத் பணித்தளத்தில் ஊழியம் செய்ய சமையல்காரர் தேவை

*தேவ கிருபையினால் கடந்த 20 ஆண்டுகளில் நம் ஷாலோம் ஊழியங்கள் விரைவாக வளர்ந்து வருகிறது.*

தமிழ்நாட்டிலிருந்து, ஊழியத்திற்கென்று அர்ப்பணித்து, குஜராத் தாகோத் பணித்தளத்தில் தங்கியிருந்து தேவ பிள்ளைகள் ஊழியம் செய்து வருகிறார்கள். இந்த தேவ பிள்ளைகளுக்கும், மேலும் அவ்வப்போது பணித்தளத்தைப் பார்வையிட வருகின்ற தேவ பிள்ளைகளுக்கும் உணவு வழங்க சமையல் செய்வதற்கு ஊழிய அர்ப்பணிப்பு உள்ள சகோதரர் அல்லது சகோதரி உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். இந்த உன்னதமான ஊழியத்திற்கு முன் வருவோர் எங்களை தொடர்பு கொள்ளவும். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக

**தொடர்பு கொள்ள வேண்டிய செல் போன் : 09377445468, 9345675468,**

# பணித்தள அறிக்கை....



***கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!***

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். நான் என்னை அறிமுகப்படுத்துவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். நான் ஷாலோம் பிஷப் தேவதாஸ் அவர்களின் மூத்த மகன் Gladson Titus. கர்த்தருடைய பெரிதான கிருபையினால் MBA படித்து முடித்துள்ளேன். கர்த்தருடைய பெரிதான கிருபையினால் அநேக ஆண்டுகளுக்குப்பின் கடந்த ஜுலை மாதம் நானும் எனது சகோதரன் Brighton Shalom மற்றும் எனது தங்கை Joy Shekinah ஆகிய மூவரும் சேர்ந்து பணித்தளத்திற்குச் சென்று பார்வையிட்டோம். ஒரு மாதம் பணித்தளத்தில் தங்கியிருந்து, குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அநேக கிராம ஆலயங்களை பார்வையிட்டோம். மேலும் ஷாலோம் போதகர்கள், சுதேச ஊழியர்கள் மற்றும் சபை மூப்பர்கள் அநேகரை சந்திக்க தேவன் கிருபை தந்தார். அதன்பின் ஷாலோம் ஊழியத்தின் மூலமாக நீங்கள் தாங்கிவரும் அனைத்து பீல் ஆதிவாசி சிறுவர்களையும் விடுதிகளுக்கு சென்று சந்தித்து தேவனை மகிமைப்படுத்தினோம். அங்கு பிள்ளைகளுடைய வாழ்க்கையில் கர்த்தருடைய கிருபையும், திட்டமும் நிறைவேறி வருகிறதையும், ஷாலோம் ஊழியங்களின் வளர்ச்சியையும் காண முடிந்தது. ஏற்கனவே நாங்கள் இந்த ஊழியத்திற்கு எங்களை அர்ப்பணித்திருந்தாலும், இந்த பணித்தள வருகை எங்களை மிகவும் கவர்ந்தது மட்டுமல்லாமல் நாங்கள் நினைத்ததற்கும் மேலாக அதிகமாக தேவனால் உந்தப்பட்டு ஊழியத்திற்கு முழுமையாக அர்ப்பணித்துள்ளோம். கர்த்தருக்குச் சித்தமானால் நான் பணித்தளத்தில் அலுவலக நிர்வாகத்தின் மூலமாகவும் எனது சகோதரன் Shalom - Media மூலமாகவும், எனது சகோதரி Shekinah மருத்துவ சேவை மூலமாகவும் ஷாலோம் ஊழியத்தில் பயன்படுத்தப்பட வாஞ்சித்து ஜெபித்து வருகிறோம். நாங்கள் குடும்பமாய் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து தேவனுக்கென்று ஊழியம் செய்யவும் பீல் மக்கள் மத்தியில் தேவ ராஜ்ஜியம் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

மேலும் நாங்கள் பீல் ஆதிவாசி சிறுவர்களை சந்தித்ததில் அவர்கள் கல்வியறிவிலும், திறமையிலும், மற்றும் வேத அறிவிலும் சிறந்து விளங்குகின்றார்கள். மட்டுமல்லாமல் இவர்கள் வருங்காலத்தில் பெரிய காரியங்களை செய்து தங்கள் சமுதாயத்தையே மாற்றிவிடுவார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் இந்த மகிமையான வாய்ப்புகள் இன்னும் அநேக சிறுவர்களுக்கு கிடைக்கவில்லை. அதை பார்க்கும்போது உள்ளத்தில் அதிக பாரம் கொண்டேன். ஆகையால் மற்ற பிள்ளைகளையும் தேவன் உயர்த்தும்படியாக ஜெபியுங்கள். அவர்களைத் தாங்கக்கூடிய ஆதரவாளர்கள் கிடைக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

தங்களுடைய ஊக்கமான ஜெபத்திற்காகவும், நிதி உதவிக்காகவும் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறோம். நாங்களும் உங்களுக்காக தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மட்டுமல்லாமல் தேவன் நிச்சயமாய் இந்த ஊழியத்தின் மூலமாய் உங்களை ஆசீர்வதிப்பாராக!

– சகோ. டைட்டஸ்

## சுதேச ஊழியர் சாட்சி

# Rev. கேம்சந்த் மாவி குஜராத்



இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! என்னுடைய பெயர் கேம்சந்த் Z. மாவி. நான் குஜராத் மாநிலத்தில் தாகோத் மாவட்டத்தில் உள்ள போர்கேடா என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. ஒரு சமயம் எங்கள் பகுதி முழுவதும் அந்நிய தெய்வங்களுக்கும், மந்திரவாதிகளுக்கும் அடிமையாக இருந்து வந்தது. பாவம், சாபம், வியாதி, பிசாசின் பிடி இவற்றில் இருந்து விடுவிப்பவர் யார் என்று தெரியாமல் கலங்கி வேதனையோடு வாழ்ந்து வந்தோம்.

இந்த சமயத்தில்தான் எங்கள் கிராமத்திற்கு பக்கத்தில் உள்ள லிலேர் கிராமத்தில் ஒரு கிறிஸ்தவக் கூட்டம் நடக்கிறது, அங்கு ஆலயமும் உள்ளது என்று கேள்விப்பட்டு அங்கு சென்றேன். ஆலய ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபிக்க ஆரம்பித்தபோது, எனது சரீரத்திலும் உள்ளத்திலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. மேலும் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு அடங்கிய திரைப்படம் காட்டப்பட்டது. மேலும் எனக்கு ஒரு புதிய ஏற்பாடும் தரப்பட்டது. அதை நான் வாசித்தபின் நான் ஒரு பாவி என்று உணர்ந்து அழ ஆரம்பித்தேன். இந்த நேரத்தல் என்னைப் பிடித்திருந்த பிசாசுகள் என்னை விட்டு விலகி ஓடின. இயேசுவே மெய்யான தேவன் என்று அறிக்கையிட்டு, குடும்பமாக தேவனை ஏற்றுக் கொண்டோம். எனது உள்ளத்தை தேவ சமாதானம் நிரப்பியது.

ஒரு நாள் நான் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது தேவனுடைய ஊழியத்தைச் செய்யும்படியாக தேவன் எனது உள்ளத்தில் வாஞ்சையைத் தந்தார். அதன்படி 1995ம் ஆண்டு ஷாலோம் ஊழியத்துடன் இணைந்து குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம். மேலும் B.Th., படித்து முடித்து 2009ம் ஆண்டு ஷாலோம் போதகராக அபிஷேகம் செய்யப்பட்டு ஊழியம் செய்து வருகிறேன். தற்போது எங்களது சபையில் சுமார் 50 குடும்பத்திற்கும் மேலானோர் தேவனை ஆராதித்து வருகின்றனர். தொடர்ந்து எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும் மூன்று பிள்ளைகளுக்காகவும், நாங்கள் செய்து வருகின்ற ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Tirchy City A.G. Church,**

# சகோ. டைட்டஸ், சகோ. ஷாலோம் & சகோதரி ஜாய் ஷெக்கினா

## பணித்தள வருகை – ஜூலை, 2011




இராஜஸ்தான், கோய்கா கிராமத்தில் கலாச்சார வரவேற்பு



இராஜஸ்தான், ஹெஜாமால் கிராம ஆலயத்தில் சகோ. டைட்டஸ் அவர்களின் பகிர்வு



இராஜஸ்தான், ஹெஜாமால் கிராம ஆலயத்தில் சகோ. ஷாலோம் அவர்களின் பகிர்வு



இராஜஸ்தான், ஹெஜாமால் கிராம ஆலயத்தில் சகோதரி ஜாய் ஷெக்கினா அவர்களின் பகிர்வு



இராஜஸ்தான், ஹெஜாமால் கிராம ஆலயத்தில் சிறப்புப் பாடல்



இராஜஸ்தான், கோய்கா விடுதி சிறுவர்களுடன்



தெல்சர் கிராம ஆலயத்தில் போதகர் குடும்பத்துடன்





இராஜஸ்தான், பிஜல்பூர் விடுதி சிறுவர்களுடன்



குஜராத், பாரேவா கிராம ஆலயத்தில் காணிக்கையை ஆசீர்வதித்து ஜெபிக்கும் சகோ. டைட்டஸ்




குஜராத், ஹிரோலா கிராம CDC குழந்தைகளின் சேவையில் சகோ. டைட்டஸ் மற்றும் சகோதரி ஜாய் ஷெக்கினா




குஜராத், ஹிரோலா கிராம CDC சிறுவர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கும் சகோ. டைட்டஸ் மற்றும் சகோதரி ஜாய் ஷெக்கினா




குஜராத், ஜெரி கிராம CDC சிறுவர்களுக்கு மிதி வண்டிகள் வழங்கும் சகோ. டைட்டஸ் மற்றும் சகோ. ஷாலோம்

# பரிசுத்த வேதம் வழங்குவோம் வாருங்கள்



வேதத்தை வாசித்து தேவனை துதிக்கும்
பீல் ஆதிவாசிக் குடும்பம்

**கடந்த 2010ம் ஆண்டு**
**பணித்தளத்தில்**
**பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு**
**வழங்கப்பட்ட வேதாகமங்கள்**



சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் மூலம் வழங்கப்பட்ட வேதாகமங்கள்




விசுவாசிகளுக்காக ஊழியர்களிடம் வழங்கப்படும் வேதாகமங்கள்





Pr. ஆமோஸ் (மார்த்தாண்டம்) அவர்கள் மூலம் வழங்கப்பட்ட வேதாகமங்கள்



பணித்தளத்தில் அதிகபடியாக வேதாகமம் விநியோகிக்கப்பட்டமைக்கான BSI விருது



பரிசுத்த வேதாகமம் பெற்ற மகிழ்ச்சியில்
நமது பீல் ஆதிவாசி விசுவாசிகள்




# வேதம் வழங்குவோம் வாருங்கள்

***பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு***

நம் ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் மூலமாக தேவன் பீல் ஆதிவாசி மக்களை இரட்சித்து அனுதினமும் சபையில் சேர்த்து வருகிறார். இவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி தேவனுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வருகிறார்கள். இப்போது இந்த மக்கள் எழுதவும் படிக்கவும் செய்கிறார்கள். இந்த மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும்.

கடந்த 2010 ம் ஆண்டில் இந்திய வேதாகமச் சங்கம் குஜராத், அகமதாபாத் கிளை மூலமாக சுமார் 7 ஆயிரம் வேதப்புத்தகங்கள் வாங்கி நமது பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்குக் கொடுக்க தேவன் கிருபை செய்துள்ளார். குஜராத் மாநிலத்தில் அதிக வேதப்புத்தகங்கள் விநியோகம் செய்தமைக்காக ஷாலோம் ஊழியத்திற்கு இந்திய வேதாகமச் சங்கம் **“சிறப்பு விருது”** கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளது. அதற்காக தேவனைத் துதிக்கிறோம்...

உங்களில் பலர் கடந்த ஆண்டில் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதாகமம் வாங்கிக் கொடுக்கும்படியாக உதாரத்துவமான காணிக்கை அளித்துள்ளீர்கள். இதற்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

2011ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாக 10000 (ஹிந்தி & குஜராத்தி) வேதாகமங்கள் தேவைப்படுகின்றன. ரூ. 80 வீதம் 10000 வேதாகமங்களுக்கு நிதி உதவித் தேவைப்படுகிறது. நிதி உதவி ரூ. 8 லட்சங்கள் கிடைக்கும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில் உங்களால் முடிந்த வேதாகமங்களை வாங்கிக் கொடுக்கலாம். உங்கள் நண்பர்களையும், உறவினர்களையும் வாங்கிக் கொடுக்கச் சொல்லலாம். அதற்கான காணிக்கையை **SHARING LOVE MISSION** என்ற பெயரில் **D.D., M.O.** அல்லது **Cheque** மூலமாகவோ தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இந்த தேவ திட்டத்தை நிறைவேற்றலாம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

## தேவனைத் துதிக்கிறோம்...

கடந்த 07.08.2011 ஞாயிறு அன்று தூத்துக்குடி போல்டன்புரம் CSI அந்திரேயா ஆலயத்தில் காலை 8.00 மணி ஆராதனையிலும், அதே ஞாயிறு காலை 9.00 மணிக்கு தூத்துக்குடி, கால்டுவெல் காலனி, கால்டுவெல் நினைவு ஆலய ஆராதனையிலும் நமது ஷாலோம் பிஷப் தேவதாஸ் அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். போல்டன்புரம் சபை குரு Rev. ஆசீர் ஜோசப் ஐயரவர்களுக்கும், கால்டுவெல் காலனி சபை குரு Rev. செல்லப்பா ஐயரவர்களுக்கும் மேலும் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் நன்றி தெரிவித்து, தேவனைத் துதிக்கிறோம்...

# `ôúXôm

# £ßYo F¯VeLs



***"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்...***

**ஞாயிறுபள்ளி வகுப்புகள்**

இராஜஸ்தான், குஜராத், மத்தியபிரதேசம் ஆகிய மூன்று பகுதிகளில் 635 ஆராதனை குழுக்கள் மற்றும் 205 ஆலயங்களில் ஞாயிறுபள்ளி வகுப்புகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதில் அநேக ஆதிவாசி பிள்ளைகள் கலந்து கொண்டு தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு வருகின்றனர்.

**ஞாயிறுபள்ளி ஆசிரியர் பயிற்சி முகாம்கள்**

ஞாயிறுபள்ளி வகுப்புகளை மூன்று மாநிலங்களிலும் நமது சுதேச ஊழியர்களின் மனைவிகளே நடத்தி வருகின்றனர். பிள்ளைகள் அதிகமாக இருப்பதால் அங்குள்ள வாலிபர்களும் சேர்ந்து ஞாயிறுபள்ளியை நடந்த திட்டமிடப்பட்டுள்ளது. அவர்களுக்கென்று சிறப்பு ஆசிரியர் பயிற்சி முகாம் நடந்தப்பட்டது. 500க்கும் மேற்பட்ட பகுதிகளில் இருந்து ஆசிரியர்கள் இந்த பயிற்சியில் கலந்து கொண்டனர். இதன் மூலமாக அநேக ஆசிரியர்கள் தேவனுடைய திட்டத்தை உணர்ந்து ஆசிரியர்களாக செயல்படத் தீர்மானம் எடுத்துள்ளனர்.



**CBC (VBS) :**

ஒவ்வொரு வருடமும் மே மாதம் 3 மாநிலங்களின் 635 ஆராதனை குழுக்கள் மற்றும் 205 ஆலயங்களில் CBC 600–க்கும் மேற்பட்ட ஆசிரியர்களை கொண்டு நடைபெற்று வருகிறது.



கடந்த 2011ம் ஆண்டு மே மாதம் CBC **"ஜீவ வார்த்தை"** என்ற தலைப்பில் நடைபெற்றது. இதில் 30,000க்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டு வேத வசனங்கள் தங்கள் வாழ்வில் ஜீவனாக இருக்கும் என்ற உறுதியுடன் இயேசுவை ஏற்றுக் கொண்டனர். இதற்கான பாடத்திட்டம் நமது ஊழியத்தின் மூலமாகவே தயாரிக்கப்பட்டு, புத்தகங்கள் அச்சிடப்பட்டு சிறுவர்களுக்கு பயன்படுத்தப்பட்டன.



மேலும் இதற்காக 3 மாநிலங்களிலும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. இதில் 680க்கும் அதிகமான இயக்குனர்கள் கலந்து கொண்டனர். பயிற்சியில் வேதவசனத்தின் சத்தியங்களை அறிந்தவர்களாய் அவைகளை ஏற்று இயேசுவின் வழியில் வேதவசனங்களின்படி செயல்பட திட்டமிட்டு பிள்ளைகளையும் அதின்படி வழிநடத்தினார்கள்.

**கல்வி பணி மற்றும் விடுதி பணி**

மூன்று மாநிலங்களிலும் ஆதிவாசி பிள்ளைகளுக்கென்று கல்விப்பணி நடைபெற்று வருகிறது. இதற்கு முந்தைய தலைமுறைகள் படிப்பறிவு இல்லாத மக்களாக காணப்பட்டனர். இப்போது தான் முதன் முதலாக இந்த இன மக்களுக்கு கல்வி அறிவு கொடுக்கபட்டு வருகிறது. இதன் விளைவாக ஆதிவாசி பிள்ளைகள் இன்று 70% மதிப்பெண்கள் பெற்று பொறியியல், மருத்துவம், ஆசிரியர் பயிற்சி ஆகிய படிப்புகளை படித்து வருகின்றனர். இதுதான் பொறியியல், மருத்துவம், ஆசிரியர் என உயர் கல்விகளை கற்கும் முதலாம் தலைமுறையினர். தேர்வு நேரங்களில் பிள்ளைகளுக்கென்று சிறப்பு ஜெபக் கூடுகை நடத்தப்பட்டு தேர்வுக்கான ஆலோசனைகள் கொடுக்கப்பட்டு, பிள்ளைகளுக்காக ஜெபிக்கப்படுகிறது.



நமது ஊழியத்தின் மூலம் இராஜஸ்தான் மாநிலத்தில் பிஜல்பூர் கிராமத்தில் 1 விடுதியுடன் கூடிய பள்ளிக்கூடம் இயங்கி வருகிறது. மேலும் ஆதிவாசி மாணவர்களுக்கென்று



8 விடுதிகள் செயல்பட்டு வருகிறது. இதில் மொத்தம் 1611 குழந்தைகள் தாங்கப்படுகின்றனர்.

a) 705 மாணவர்கள் Compassion Project மூலமாகவும்,

b) 576 குழந்தைகள் ஷாலோம் ஊழிய ஆதரவாளர்கள் மூலமாகவும் தாங்கப்பட்டு வருகின்றனர்.

**இன்னும் 330 குழந்தைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை**

**சிறுவர் சிறப்பு முகாம்கள்**



மூன்று மாநிலங்களிலும் சிறுவர்களுக்கென்று சிறுவர் முகாம்கள் ஆண்டு தோறும் நடைபெற்று வருகின்றன. இதில் ஒவ்வொரு ஆண்டும் 5000–க்கும் அதிகமான சிறுவர்கள் கலந்துகொள்கின்றனர். முகாமின் மூலம் சிறுவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்டு வருகிறார்கள்.

பாடல்கள், ஆராதனைகள், குறுநாடகம், பொம்மலாட்ட காட்சிகள், குழு ஆலோசனை, சிறப்பு செய்தி, ஐக்கிய உணவு வேளை, அர்ப்பணிப்பின் நேரம் என்று பிரிக்கப்பட்டு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

**பீல் சிறுவர்களுக்காக நாம் செய்ய வேண்டியது**

1. ஆதிவாசி பிள்ளைகளும் நம் பிள்ளைகளைப் போல கல்வியறிவை பெற்று சமூகத்தில் ஒரு அந்தஸ்த்தைப் பெற்றுக் கொள்ள ஜெபியுங்கள். அவர்களின் தேவைகளான உணவு, சீருடை, கல்விக் கட்டணம் ஆகியவை சந்திக்கப்பட ஜெபியுங்கள். **மாதம் ரூ.500/– கொடுத்து பீல் ஆதிவாசி பிள்ளைகளை தாங்கக்கூடிய 330 குழந்தை ஆதரவாளர்கள் எழும்ப ஜெபியுங்கள்.** நீங்கள் ஒரு சில பிள்ளைகளை தாங்க முன்வாருங்கள். உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு இதைக் குறித்து அறிமுகப்படுத்துங்கள்.

2. விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களுக்கு விடுதியில் பயன்படுத்தக்கூடிய பாய், படுக்கை விரிப்பு, கம்பளி (குளிர் காலங்களில் பயன்படுத்த) அவர்களுக்கு பயன்படும் பள்ளி உபகரணங்கள் போன்ற தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். உங்களால் முடிந்தால் வாங்கி

கொடுத்து உதவ முன்வாருங்கள்.

**3.** வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் ஞாயிறுபள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாம்கள் & CBC பயிற்சி முகாம்கள் மற்றும் சிறுவர் சிறப்பு முகாம்களுக்காக ஜெபியுங்கள். முகாமிற்கு தேவையான இடம், உணவு மற்றும் இதர தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். முடியுமானால் நீங்களும் உதவி செய்ய முன்வாருங்கள்.

**4.** வருடத்திற்கு ஒருமுறை ஞாயிறுபள்ளி & CBC– க்கு தேவையான பயிற்சி புத்தகங்கள், பாடல் புத்தகங்கள், ஒலிநாடாக்கள் சிறப்பாய் தயார் செய்ய ஜெபியுங்கள். அதற்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். நீங்களும் தாங்குங்கள்.

**5.** கிறிஸ்மஸ் காலத்தில் நம் பிள்ளைகளை போல பீல் ஆதிவாசி விடுதியில் படித்து வரும் 906 பிள்ளைகளுக்கும், நபர் ஒருவருக்கு ரூ. 500/– வீதம் செலவு செய்து கிறிஸ்மஸ் வெகுமதிகள் வழங்கப்படுகின்றன. இதற்காக ஒவ்வொரு வருடமும் சுமார் **4.5 இலட்சங்கள்** தேவைப்படுகின்றது. இந்த தேவை சந்திக்கப்பட ஜெபியுங்கள். நம் பிள்ளைகளை போல அவர்களும் சந்தோஷமாக கிறிஸ்மஸ் கொண்டாட தேவன் உங்கள் மனதில் பேசியபடி தாங்குங்கள். கர்த்தர் தாமே உங்களையும் உங்கள் குடும்பங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக.

நீங்கள் இப்படிப்பட்ட சிறுவர் பணிக்கென்று நீங்கள் தாங்க முன்வந்தால் நமது ஷாலோம் தலைமை அலுவலகத்திற்கு, **Shalom Charity Mission** என்ற பெயரில் D.D. அல்லது Cheque அல்லது M.O. எடுத்து அனுப்பலாம். நாம் இன்னும் சற்று தாமதித்தால் இந்த சிறுவர்களின் குழந்தைப் பருவம் முடிந்துவிடும் ஆகவே இந்த சிறுவர்களை பராமரிக்கும்படியாக தேவன் நமக்குத் தந்த கடமைதனை உணர்ந்து செல்படுவோம் வாருங்கள்! தேவன் தாமே உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!



நமது ஷாலோம் விடுதி ஆதிவாசி சிறுவர்கள்

# SHALOM CHARITY MISSION
## ஷாலோம் சேரிட்டி மிஷன்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 19 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **“கல்வி அறிவு வளர்ச்சி”** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக **Shalom Charity Mission –** என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission –** மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாகத் திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும்.

Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission –** என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

***மேலும் குழந்தை ஆதரவுத் தொகை*** அனுப்புவோர் **Shalom Charity Mission –** என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

# காணிக்கை அனுப்பும் வழிகள்

- ⇨ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ⇨ M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ⇨ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- ⇨ இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- ⇨ வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADASS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

---

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

---

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373
(IFS Code : UTIB0000105)

---

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799
(IFS Code : ICIC0006139)

---

ஆதரவாளர்கள் எங்களது வங்கிக் கணக்கில் காணிக்கை செலுத்தும் போது, உங்களது பெயரை கண்டிப்பாக கம்யூட்டரில் பதிவு செய்யும்படி ஒவ்வொரு முறையும் வங்கி அலுவலகரிடம் கூறி அதை உறுதி செய்து கொள்ளவும், இல்லையெனில் நீங்கள் செலுத்தும் காணிக்கை யார் செலுத்தியது என்ற விபரம் எங்களுக்கும் தெரியாமல் போக வாய்ப்புள்ளது.

# தூத்துக்குடி மாவட்ட பிரதிநிதிகள்

***கிறிஸ்துவில் பிரியமானவர்களே,***

குஜராத், இராஜஸ்தான் மத்தியப்பிரதேசம் மாநிலங்களில் பீல் மக்கள் மத்தியில் நடைபெற்றுவரும் நமது ஷாலோம் ஊழியங்களுக்காக அநேக மாவட்டங்களில் பிரதிநிதிகள் தன்னார்வத்துடன் செயல்பட்டு வருகிறார்கள். அதுபோல தூத்துக்குடி மாவட்டத்திலும் கீழ்க்கண்ட பிரதிநிதிகள் செயல்பட்டுவருகிறார்கள். தேவன்தாமே அவர்களையும், அவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

ஷாலோம் ஊழியங்களுக்கு காணிக்கைக் கொடுக்க முன்வரும் ஆதரவாளர்கள் அந்தந்த பகுதிகளில் செயல்பட்டு வரும் பிரதிநிதிகளை தொடர்புகொள்ள அன்பாய் கேட்கிறோம். மேலும் நீங்களும் உங்களது பகுதியில் பிரதிநிதியாக செயல்பட விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்புக்கு சகோ. சாம் குணசீலன், செல் : 9345675468


| S.No. | Rep. No | Name | | Phone No. |
|---|---|---|---|---|
| 1 | 059 | Mr.Arputharaj Margoschis.J | Shalom Comm. Director | 9486222012 |
| 2 | 023 | Mr.Sam Gunaseelan.S | Shalom Office Manager | 9345675468 |
| 3 | 028 | Mr.Johnson Jebaraj.J | Shalom Office Staff | 9362617374 |
| 4 | 002 | Mr.Allen Elvis.S | Shalom Office Staff | 9344727978 |
| 5 | 076 | Mr.Judes Rathish Kumar | Shalom Office Staff | 9600695598 |
| 6 | 005 | Mr.Jeyapaul.I.A | Shalom Office Staff | 9789718935 |
| 7 | 057 | Mr.Jeyaprakash.S.P | Shalom Office Staff | 9994077782 |
| 8 | 080 | Mr.David | Shalom Office Staff | 9489291568 |

| S.No. | Rep. No | Name | | Phone No. |
|---|---|---|---|---|
| 9 | 015 | Mrs.Ebenezar David.D | Shalom Office Staff | 8754901554 |
| 10 | 042 | Mrs.Esther Jeba Mathu.I.R | Shalom Office Staff | 7708941251 |
| 11 | 043 | Ms.Anniammal.S | Shalom Office Staff | |
| 12 | 088 | Ms.Elizabeth.M | Shalom Office Staff | 9597154709 |
| 13 | 049 | Ms.Karunya.K | Shalom Office Staff | 8870329311 |
| 14 | 050 | Mrs.Chandra.J | Shalom Office Staff | 9976626661 |
| 15 | 089 | Mrs.Geetha.J | Shalom Office Staff | 9791391853 |
| 16 | 090 | Ms.Lilly.G | Shalom Office Staff | 8754200663 |
| 17 | 091 | Ms.Aakila Esther.J | Shalom Office Staff | 8124747414 |
| | | | **Area** | |
| 18 | 047 | Mr.Muthu | Amulya Sea Foods | 9894685538 |
| 19 | 094 | Mr.Ruban | Boulton Puram | |
| 20 | 083 | Mr.Valentine John | Caldwell Colony | 9940008442 |
| 21 | 048 | Mr.Selvaraj | Thermal Nagar Camp I | 9367180270 |
| 22 | 093 | Mrs. Jesu Marial P. | Thermal Nagar Camp II | 9486984296 |
| 23 | 082 | Ms.Esther Jeya | Keela Shanmugapuram | 9688123508 |

| S.No. | Rep. No | Name | | Phone No. |
|---|---|---|---|---|
| 24 | 027 | Mrs.Nirmala Felixson | Kirubai Nagar | 9976398333 |
| 25 | 058 | Mrs.Patturose Sargunam | Korampallam | 9487324068 |
| 26 | 036 | Mr.Rajan.Y | Muniyasamy puram | 9443167129 |
| 27 | 092 | Mr.Paulraj.Y | Muthukrishnapuram | 8015807361 |
| 28 | 045 | Mr.Godwin | N.S.F & Puthiyamputhur | 9443344754 |
| 29 | 046 | Mr.Balasingh | Nila Cold Storage | 0461 - 2346251 |
| 30 | 012 | Mrs.Juliet Koilpillai | P & T Colony | 9894723162 |
| 31 | 007 | Mrs.Rajakani | Poobalrayerpuram | 9842217738 |
| 32 | 041 | Mrs.Fathima Mary | Rajapandi Nagar | 8870820821 |
| 33 | 031 | Mrs.Selvaseeli | S.M.Puram | 9842193224 |
| 34 | 087 | Mrs.Anusiya | Shanmugapuram | 9788854965 |
| 35 | 095 | Mr.Palanivel Kumar.K | Spic Nagar | 9361115515 |
| 36 | 062 | Mr.Basker.C | State Bank Colony I | 9994170465 |
| 37 | 016 | Mrs.Shanthi Livingston | Sunderavel Puram | 9787648246 |
| 38 | 030 | Mr.Sekaran | Teachers' Colony | 9944210217 |
| 39 | 035 | Mr.Thomas.I | Thalamuthu Nagar | |

# பில்லி சன்டே

*மிஷனெரி முன்னோடிகள்*



**பில்லி சன்டே,** 1862ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் தேதி வில்லியம் சன்டேக்கும் மேரி ஜேனுக்கும், லோவாவில் (Lowa) உள்ள ஏமசில் (Ames) பிறந்தார். பில்லி சன்டே பிறந்த ஐந்து வாரத்திற்குப் பிறகு அவருடைய தந்தை வில்லியம் சன்டே மரித்தார். வறுமையில் பிறந்த சன்டே, தனது பத்தாவது வயதில் இராணுவ வீரர்களுடைய அநாதை இல்லத்தில் (Soldier's Orphanage) சேர்க்கப்பட்டார். அங்கு அவர் ஒழுங்கான பழக்கவழக்கங்களையும் தொடக்கக்கல்வியையும் கற்றதுமின்றி, தான் ஒரு ஓட்டக்காரர் (Athelete) என்பதையும் அறிந்து கொண்டார். இரண்டு வருடங்களுக்குப் பிறகு அவர் அநாதை இல்லத்தை விட்டு நேவடாவில் (Nevada) உள்ள ஜாண் ஸ்காட் என்பவரிடம் வேலைக்காக சென்றார்.

ஸ்காட், சன்டேக்கு ஒரு வீட்டையும், பள்ளியில் சேருவதற்கு வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். சன்டே தன்னுடைய உயர்நிலைப்பள்ளி படித்ததற்கான பட்டம் பெறுவதற்கு முன்னே பள்ளியை விட்டு, ஏம்ஸ்க்குச் சென்றார். சன்டே 1880ஆம் ஆண்டு தேசிய அளவில் நடைபெற்ற பேஸ்பால் முக்கிய லீக் போட்டிகளில் விளையாடினதுமின்றி பிரபல Outfielder ஆகவும் விளங்கினார். சிகாகோவில் ஒரு ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு தெருமுனையில் நின்று பசிபிக் கார்டன் ஊழிய ஸ்தாபனம் மூலம் வந்த சுவிசேஷக்குழுவினர் பிரசங்கித்த நற்செய்தியை சன்டே தனது அணித்தோழர்களுடன் கவனித்துக் கேட்டார். தன்னுடைய அம்மா பாடிய கீர்த்தனைப் பாடல்களால் கவரப்பட்ட சன்டே ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் ஒழுங்காக கலந்து கொண்டார். அதன் மூலம் சன்டே இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு மறுபடியும் பிறந்தார்.

சன்டே குடிப்பதையும் சீட்டாடுவதையும் நிறுத்திவிட்டு தூய வாழ்க்கை வாழ்ந்தார். அவருடைய மாற்றப்பட்ட இந்த பழக்கவழக்கங்கள் அவருடைய அணித்தோழர்களாலும் உற்றார்–உறவினர்களாலும் கவனிக்கப்பட்டது. கிறிஸ்தவ சுவிசேஷகராக மாற்றப்பட்ட சன்டே கிறிஸ்தவ ஊழியத்திற்காக பேஸ்பால் விளையாடுவதை விட்டுவிட்டார். 1888ஆம் ஆண்டு செப்டம்பர் 5ம் தேதி ஹெலன் A. நெல் தாம்சனை மணந்தார். சன்டே தனது மூன்று பிள்ளைகளின் இழப்பினிமித்தம் வியாகுலப்பட்டிருந்த வேளையில் தன்னுடைய மனைவியின் அன்பையே சார்ந்திருந்தார்.

சன்டே YMCA –ல் துணை செயலாளராக சேர்ந்து பணியாற்றினார். தான் பின்னால் செய்யப் போகிற சுவிசேஷப் பணிக்கு தன்னை ஆயத்தம் செய்வதற்கு இது உதவியது. மூன்று வருடங்களாக சன்டே, வியாதியஸ்தர்களை சந்தித்தார். வியாகுலப்பட்டவர்களுக்காக ஜெபித்தார். தற்கொலை எண்ணம் உள்ளவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். ஒடுக்கப்பட்ட ஜனங்களை சந்தித்து சுவிசேஷக் கூட்டங்களுக்கு வரும்படி அழைப்பார். 1893ஆம் ஆண்டு சன்டே, அமெரிக்காவில் உள்ள தலைசிறந்த சுவிசேஷகர்களுள் ஒருவரான J. வில்பர்சேப்மன் (J. Wilbur Chapman) கீழ் முழுநேர உதவி சுவிசேஷகராக ஊழியம் செய்தார். ஒவ்வொரு நாள் இரவும் சேப்மன் பிரசங்கித்த பிரசங்கங்களை கவனித்துக் கொண்டிருந்த சன்டே எப்படி பிரசங்கம் பண்ணவேண்டும் என்பதைக் குறித்த அறிவைப் பெற்றுக்கொண்டார். சேப்மனும் சன்டேயினுடைய சொந்த முயற்சியில் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷ பிரசங்கங்களை கவனித்து, எப்படி நன்றாக பிரசங்கிக்க முடியும் என்று எடுத்துக்காட்டி அவரை உற்சாகமூட்டினார். 1896ஆம் ஆண்டு சேப்மன், சேகரத்திற்கு திரும்பியபோது, சன்டே தானாகவே லோவாவில் உள்ள கார்னரில் கூட்டங்களை நடத்தத் தொடங்கினார். பன்னிரண்டு வருஷத்துக்குள் சன்டே ஏறக்குறைய எழுபது வகை சமுதாய மக்களுக்கு பிரசங்கித்தார். அவர்களில் பெரும்பாலானோர் லோவா மற்றும் இலினாயிஸை சேர்ந்தவர்கள்.

சன்டே வேதாகமத்தின் முக்கிய கருப்பொருளான கிறிஸ்துவின் கன்னிப்பிறப்பு, கிறிஸ்துவின் சிலுவை பலி உபதேசம், கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதல், பிசாசும் நரகமும், இயேசு கிறிஸ்துவின் உடனடி (சீக்கிர) வருகை போன்றவற்றை ஆணித்தரமாகப் பிரசங்கித்தார். அவருடைய போதகங்கள், தனிப்பட்ட தேவன், இயேசு கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்பு ஆகியவை வேதாகமத்தில் உள்ள நல்லொழுக்க பாடங்களை சார்ந்தவையாக இருந்தன. எளிய நடை வாய்மொழி போதகத்தினாலும், உத்வேக பிரசங்கத்தினாலும் சன்டே தேசத்தின் பிரபலமான சுவிசேஷகராக மாறினார். மற்ற எந்த சுவிசேஷகரைப் பார்க்கிலும் சன்டே அதிகமான ஜனக்கூட்டத்தை தன் பக்கமாக கவர்ந்து இழுத்தார். திரளான ஜனக்கூட்டம் வந்தபோது, சன்டே பெரிய கேன்வாஸ் துணிகளால் ஆன கூடாரங்களை அமைத்து கூட்டம் நடத்தினார். சன்டே பிரசங்க மேடையில் நின்றும் பிரசங்க மேடையின் ஒரு முனை தொடங்கி, மறுமுனை வரை ஓடியும், மேடையின் குறுக்காக நடந்தும், குதித்தும் பிரசங்கிப்பார். சில நேரங்களில் நாற்காலிகளையும் மோதித்தள்ளி தனது கருத்துக்களை வலியுறுத்துவார். பில்லி சன்டே சுவிசேஷம் சொல்வதற்காக பயன்படுத்தும் முக்கிய குறிப்பு, "அக்கினியும் கந்தகமும்" என்பதைப் பற்றியது. அடிப்படைவாதிகளில் கொள்கைகளை ஆணித்தரமாக பிடித்துக் கொண்ட அவர், அரசியல் சுதந்திரக் கொள்கை, பரிணாமக் கோட்பாடு, மதுபானம் போன்றவற்றிற்கு எதிராக பிரசங்கித்தார். அவருடைய ஆற்றலும், திறனும் அநேகரை மனமாற்றமடையச் செய்தது.

1910ஆம் ஆண்டு பில்லி சன்டேயைப் பற்றிய செய்திகள் செய்தித்தாளின் முதல் பக்கத்தில் வந்தது. செய்தித்தாள்கள் அடிக்கடி அவருடைய பிரசங்கங்களை முழுமையாக வெளியிட்டது. முதலாவது உலகப்போரின் போது, அவருடைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட போதனைகள் போரின் உக்கிரத்தை குறையச் செய்தது. பெரிய இதழ்களில் அறுபதுக்கும் மேலான வெளியீடுகள் சன்டேயை ஆக்கியோனாக வைத்து எழுதப்பட்டது. சன்டே ஒரு நாளைக்கு நான்கு முறை பிரசங்கம் பண்ணினார். சன்டேக்கு சிகாகோ, நியூயார்க் போன்ற பட்டணங்களிலிருந்து அதிகமாக காணிக்கை கிடைத்தது. தனக்குக் கிடைத்த காணிக்கைகளை ஊழியங்களுக்கும், போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் கொடுத்தார்.

சன்டே எந்தவித மின்சாதனப் பொருட்களின் உதவியின்றி நூறு மில்லியன் மக்களுக்கு முகமுகமாகப் பிரசங்கித்தார் என்று கூறலாம். சன்டே, நூறு மில்லியன் வித்தியாசமான தனி நபர்களுக்குப் பிரசங்கிக்கவில்லை. மாறாக அதே ஜனங்களுக்கு மறுபடி மறுபடியுமாக பிரசங்கித்தார். அவருடைய மரணத்துக்கு முன்பு வரையில், 1896ஆம் ஆண்டு முதல் 1935ஆம் ஆண்டு வரை, ஒரு மாதத்திற்கு சராசரியாக 42 பிரசங்கம் என மொத்தம் ஏறக்குறைய 20,000 பிரசங்கங்கள் சன்டே அவர்களால் பிரசங்கிக்கப்பட்டுள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது. 1935ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருதயவலி ஏற்பட்டது. அவருடைய மருத்துவர்கள் அவரை பிரசங்கம் பண்ண வேண்டாம் என்று கூறினர். சன்டேவோ அவர்களுடைய அறிவுரையை ஏற்றுக் கொள்ளாது பிரசங்கித்தார். "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற தலைப்பில் பிரசங்கித்த ஒரு வாரத்தில் 1935ஆம் ஆண்டு நவம்பர் 6ம் தேதி பில்லி சன்டே மரித்தார்.

## குஜராத் பணித்தளத்தில் மருத்துவ ஊழியம் செய்ய மருத்துவர் தேவை

*தேவ கிருபையினால் கடந்த 20 ஆண்டுகளில் நம் ஷாலோம் ஊழியங்கள் விரைவாக வளர்ந்து வருகிறது.* நமது ஊழியத்தில் ஷாலோம் சேரிட்டி மிஷன் சமுதாய பணிகளைச் செய்து வருகிறது. இதில் முக்கியமான பணி மருத்துவப் பணியாகும். இதற்காக நமது பணித்தளத்தில் **ஷாரோன் நினைவு மருத்துவமனை** நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதில் மார்த்தாண்டத்தைச் சேர்ந்த Dr. Sheju அவர்கள் கடந்த ஒரு ஆண்டாக அர்ப்பணித்து ஊழியம் செய்து வந்தார்கள். தற்போது அவர் மேற்படிப்பு படிக்கச் சென்ற காரணத்தினால், மருத்துவமனைக்கு ஒரு ஆண்டு, அல்லது இரண்டு ஆண்டு அல்லது முழுமையாகவோ **அர்ப்பணித்து ஊழியம் செய்ய மருத்துவர் தேவை. இதற்காக ஜெபியுங்கள். முன் வருவோர் எங்களை தொடர்பு கொள்ளவும்.**

**தொடர்பு கொள்ள வேண்டிய செல் போன் : 09377445468, 9345675468,**

## நாட்டு நடப்புச் செய்திகள்....

கோவையில் ஒரே வீட்டில் 21 விஷ பாம்புகள் பிடிக்கப்பட்டதால் மக்கள் அதிர்ச்சியடைந்தனர். கோவையில் மக்கள் நெரிசல் மிகுந்த உப்பார வீதியில் குடியிருப்புகள் நெருக்கமாக உள்ள இடத்தில் ரேஷன் கடை பின்புறமுள்ள ஒரு வீட்டில் மொத்தம் 21 பாம்புகள் பிடிபட்டன. இந்த பாம்புகளை பாம்பு பிடி வல்லுநகர்கள் இரண்டு மணி நேரம் போராடி 17 பாம்புகளை உயிருடனும், 4 பாம்புகளை இறந்தும் பிடித்தனர். உயிருடன் இருந்த பாம்புகளை வனப்பகுதியில் விட்டனர்.

---

தமிழகத்தில் கடந்த மாதம் சில நாட்களாக பெய்த கன மழையால் சுமார் 8 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இதில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக பாதிப்பு ஏற்பட்டது.

---

இந்த ஆண்டு இறுதியில் உலக மக்கள் தொகை 700 கோடியைத் தொடும் என பிரான்சின் தேசிய மக்கள் தொகை ஆய்வு நிறுவனத்தின் ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. 19ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து உலக மக்கள் தொகை வேகமாக அதிகரித்து வருகிறது. கடந்த 200 ஆண்டுகளில் 7 மடங்காக உயர்ந்துள்ளது.

---

ஒரு நாளைக்கு பதினைந்து நிமிடம் நடந்தால் போதும், மாரடைப்பு கேன்சர் போன்ற ஆபத்து நம்மை நெருங்காது என்று புதிய ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது. வாரத்திற்கு நூற்று ஐம்பது நிமிடங்களாவது உடற்பயிற்சி செய்வது வாழ்க்கைக்கு அவசியம் என உலக நல நிறுவனம் நிர்ணயித்துள்ளது. அதைவிட குறைவாக ஓடியாடினால் போதும் என்ற தகவல் தைவான் ஆராய்ச்சியாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது. பன்னிரண்டு ஆண்டுகளில் நான்கு லட்சம் பேரை ஆய்வு செய்ததில் இந்த உண்மைகள் கண்டறியப்பட்டுள்ளன.

நன்றி : www.dinakaran.com


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

## கிராம ஆலயம்

# சோட்டி மூவால்

### இராஜஸ்தான்



இராஜஸ்தான் மாநிலத்தில் பான்ஸ்வாடா மாவட்டத்திலுள்ள மிகவும் உள்ளடங்கிய கிராமம் சோட்டி மூவால். இந்த கிராமத்தில் உள்ள பீல் ஆதிவாசி மக்கள் அசுத்த ஆவிகளை வணங்குவதும், திருடுவதும், சாராயம் காய்ச்சிக் குடிப்பதும், சண்டையிடுவதும், இவர்களுடைய பழக்கத்திலிருந்தது. இயேசு என்றால் யார் என்றால் கூட தெரியாமல் வாழ்ந்து வந்தார்கள்.

இந்த கிராமத்தில் வாழ்ந்து வந்த சகோ. வஜ்ஹிங் வசுனியாவும் அசுத்த ஆவிகளை வணங்கி வந்தவர். இவருடைய மனைவி லாலிபேன் வசுனியா அசுத்த ஆவிகளின் பிடியில் சிக்குண்டு மிகவும் வியாதிப்பட்டார். இதிலிருந்து விடுதலை பெற அவருடைய குடும்பத்தார் அவரை பல மந்திரவாதிகளிடம் கொண்டு சென்றும், மருத்துவ சிகிச்சைகள் மேற்கொண்டும் எந்த சுகமும் கிடைக்கவில்லை. இந்நிலையில் ஷாலோம் சுதேச ஊழியர் Rev. தார்சிங் கட்டாரா –விடம் தன் மனைவியை அழைத்துச் சென்று ஜெபித்த போது தேவன் அந்நேரமே பரிபூரண சுகம் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலமாக குடும்பமாக இயேசுவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர்.

தனது மனைவிக்கு சுகம் கொடுத்த தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையுடன் தன்னை முழுவதுமாக ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்தார். தன்னுடைய வீட்டிலேயே வைத்து வாரந்தோறும் கூட்டங்களை நடத்த ஆரம்பித்தார். இதன் மூலமாக அநேக ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு இந்த கூட்டத்தில் பங்கு பெற்று தேவனை ஆராதித்து வந்தார்கள். ஆத்துமாக்கள் பெருகின காரணத்தால் போதுமான இடவசதி இல்லாததினால் தன்னுடைய நிலத்தை காணிக்கையாகக் கொடுத்தார். அந்த நிலத்தில் அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்டு 31.03.2007 அன்று பாளையங்கோட்டையைச் சேர்ந்த பேராசிரியர் C.S. கிறிஸ்டோபர் அவர்கள் மூலமாக பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த கிராம ஆலயம் பேராசிரியர் C.S. கிறிஸ்டோபர் அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் அல்லது ரூ. 1 இலட்சம்**
**நிதி உதவி கொடுத்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **மணிலால் G.டின்டோர்** |
| தந்தையின் பெயர் | : | கவுதம் டின்டோர் |
| தாயார் பெயர் | : | லக்மா டின்டோர் |
| பிறந்த நாள் | : | 17.07.2002 |
| படிக்கும் வகுப்பு | : | 4th Std., |
| சொந்த ஊர் | : | தாட்கா |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | இராஜஸ்தான் |

## மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–

இவனுடைய தந்தை இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தை சேர்ந்தவர். அந்தகாரத்தில் வாழ்ந்து வந்ததால் இவருடைய குடும்பம் சமாதானமின்றி காணப்பட்டது. மணிலாலுடைய மூத்த சகோதரன் வியாதிக்குள்ளாகி, கழுத்துப் பகுதியில் அதிக கட்டிகளினால் கஷ்டப்பட்டு வந்தான். மருத்துவமனைக்கு கொண்டு சென்று, மருத்துவ சிகிச்சை மேற்கொண்டது எந்த பலனும் அளிக்கவில்லை. ஷாலோம் ஊழியத்தை குறித்து கேள்விப்பட்டு சுதேச ஊழியர் சகோ. நாத்துபாய் டின்டோர் அவர்களிடம் சென்று ஜெபித்தபோது தேவன் அற்புதமான சுகத்தை தந்தார். இந்த அற்புதத்தின் மூலம் இவனது குடும்பத்தினர் அனைவரும் இயேசுவை ஏற்றுக் கொண்டு, சபையில் விசுவாசிகளாக உள்ளனர்.

## மாணவனைக் குறித்து :–

நன்றாக படிப்பான், விளையாட்டில் ஆர்வம் உண்டு.

## ஜெபியுங்கள்:–

நன்றாக படிக்க தேவன் இவனுக்கு நல்ல ஞானத்தைத் தரவும், இவன் தேவ பயத்தில் வளரவும், இவனது பெற்றோர்கள் செய்கின்ற வேலைகளை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

## மாணவனைத் தாங்குபவர் :– **Mrs. K. Reeba Jasmine** - K.K. Dist.

நீங்களும் மாதம் ரூ. 500/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம். இன்னும் 330 குழந்தைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை. உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்துங்கள்.